[2015 செப்டம்பர் 3

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

224—

மாணவர் விடுதி

***55883 திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், மல்லியகரை ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், மல்லியகரை ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரம் படிப்பதற்கு மட்டுமல்ல, சரித்திரம் படைக்கவும் முடியும் என்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாத மலர்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

2015 செப்டம்பர் 3]

மல்லியகரை ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியைச் சுற்றி 10 ஊராட்சிகள் அமைந்துள்ளன. எனவே, மல்லியகரை ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியை அமைத்துக் கொடுத்தால், அந்த மாணவர்கள் அங்கு தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால், விடுதி அமைத்துக் கொடுக்குமாறு கோரி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில், ஒரு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க வேண்டுமென்றால், அதைச் சுற்றி 8 கி.மீ. தொலைவிற்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி எதுவும் இருக்கக் கூடாது என்ற நிபந்தனை உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள மல்லியகரை ஊராட்சியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள கீரிப்பட்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மல்லியகரை ஊராட்சிப் பகுதியில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

ஆரம்ப சுகாதார நிலையம்

*****53914—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், ஜவ்வாதுமலை ஒன்றியம், கிளையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?